# வண்ணதாசன் படைப்புகளில் பொருள்சார் விழுமியங்கள்

*முனைவர் சா. சுஜாதா*
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் உயராய்வு மையம்,
பல்கலைக்கழகம் ஜி.டி.என். கலைக்கல்லூரி
திண்டுக்கல்

*அ.சாந்தி ராணி*
முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர், மதுரை

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5032

**ஆய்வுச் சுருக்கம்**

*பன்னெடுங்காலந்தொட்டே சீரும் சிறப்பும் பெற்று சிறந்தோங்கியது நம் தமிழ் இனம். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலையான சமூக அமைப்பும் நிகரில்லாத நாகரீகமும் தமிழினம் கொண்டிருந்ததாகவும் உலகின் அனைத்து பண்பாட்டிற்கும் அதுவே முன்னோடி என்றும் ஆய்வுகள் தெளி வாக எடுத்துக் கூறுகின்றன. நம் முன்னோர்கள் அன்றைய காலக்கட்டத்தில் இயற்கையாகக் கிடைத்த உணவுப்பொருள்களைக் கொண்டு சமைத்தும், பச்சையாகவும் உண்ணக் கற்றுக் கொண்டனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர் என்பதை அறியலாம் ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் அந்நிலை முற்றிலும் மாற்றமடைந்து காணப்படுகின்றது. வெளிநாட்டு கலாச்சார பழக்கவழக்கங்களிலும், உணவு முறைகளிலும் நம்மை அடிமைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். பொருளிற்கும் பண்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு என்று எதுவும் இல்லை. இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதே. ஏனெனில், இவை ஒன்றுக்கொன்றை பிரதிபலிக்கின்றனவையாகவே உள்ளது. நம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே பொருள் சார்ந்த இயக்கமாகவே இருக்கின்றது. பொருள் இன்றி வாழ்க்கை இல்லை. வாழ்க்கையும் பொருளைச் சார்ந்தே இயங்குகின்றது. சமூகத்தில் முந்தைய காலக்கட்டத்தை விட இன்றைய காலக்கட்டத்தில் முன்னேற்றங்களும், பலவிதமான அபிவிருத்திகளும் ஏற்பட்டுள்ளன. அதை நாம் மறுப்பதற்கில்லை. மக்கள் தொகை அதிகரிப்பதும், தேவைகள் அதிகரிப்பதும் வசதி வாய்ப்புகளுடன் மனிதன் வாழ்வதற்கு காரணமாக உள்ளது என்பதனைப் பற்றி வண்ணதாசனின் படைப்புகளில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

மக்களுக்கும் அவர்களால் உருவாக்கப்பட்ட அல்லது மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட பொருட்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து ஆராய்வதே பொருள்சார் விழுமியத்தின் நோக்கமாகும்.

இன்றைய பொருளாதார நிலையும் மனிதனின் மதிப்பீட்டிற்கு முக்கிய நிலையாக அமைகிறது. மனிதனிடம் உள்ள வசதி வாய்ப்புகளைக் கொண்டு மனிதன் மதிப்பீடு செய்யும் சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

பொருளாதாரம் இல்லாமல் எந்த மனிதனாலும் முன்னேற்றம் பெற இயலாது. மனிதன் முன்னேற்றம் பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைவதும் விழுமியங்களை ஏற்படுத்துவதும் இப்பொருளாதாரமே. ஒரு மனிதன் துன்பப்படும்போது அவனுக்காக கடவுளிடம் பிராத்தனை செய்யும் உதடு களைவிட அவனுக்காக உதவிசெய்யும் கரங்களே மேலானவை என்ற பொருளியல் விழுமியத்தையும் அதன் அம்சங்களையும் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### விழுமியங்களின் நிலைகளன்

மனிதன் மனமானது சிந்தித்துச் செயற்பட்டுத் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கேற்ப பொருட்களை உருவாக்கிக் கொள்கிறது. அவ்வாறு உருவாக்கப்பட்ட பொருட்களே சமூகத்தில் பண்பாட்டின் அடையாளமாக விளங்குகிறது. அதுவே பொருள் சார் விழுமியங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மனிதன் மனிதனாக வாழுதல் எனும் நிலையை நாம் அடைதல் சாத்தியப்படாது இருத்தலால் நம் முன்னோர்களைக் காட்டிலும் நாம் ஆற்றல் குறைந்தவர்களாகவே இருக்கிறோம். எவ்வளவு தான் நாம் உயர்ந்த, சிறந்த முன்னேற்றங்களைப் பெற்று வளர்ந்து இருந்தாலும் இழந்த உயிர்களையும், அழிந்த பொருட்களையும் பெறுவதற்கில்லை.

மக்கள் தங்கள் தேவைக்காக உருவாக்கிக் கொள்ளும் அனைத்தும் மதிப்பீட்டின் அடிப்படையில் அமையும். பக்தவத்சல பாரதி தான் எழுதிய "பண்பாட்டு மானுடவியல்" என்னும் புத்தகத்தில்

"இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், உடைகள், அணிகலன்கள், வேளாண்நிலங்கள், எழுதுகோல்கள், அழகுப் பொருள்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருள்கள் பொருள்சார் பண்பாட்டை சார்ந்தவை"[1] (பண்பாட்டு மானுடவியல் 1999.ப.164) என்று பக்தவத்சல பாரதி கூறியுள்ளார்.

நம் முன்னோர்கள் அன்றைய காலக் கட்டத்தில் இயற்கையாகக் கிடைத்த உணவுப்பொருள்களைக் கொண்டு சமைத்தும், பச்சையாகவும் உண்ணக் கற்றுக் கொண்டனர். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் அந்நிலை முற்றிலும் மாற்றமடைந்து காணப்படுகின்றது. வெளி நாட்டு கலாச்சார பழக்கவழக்கங்களிலும், உணவு முறைகளிலும் நம்மை அடிமைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

### பழங்காலப் பொருட்களின் மதிப்பு

ஒரு காலத்தில் பழமையான சாமான்கள் என்று பரணில் ஏற்றப்பட்டு உறங்கிக் கிடந்த செம்பு பாத்திரங்களும், பெரிய பெரிய பாத்திரங்களும் இன்று நகரத்தில் வாழும் மக்களின் வீடுகளில், நடுக்கூடங்களில் நாகரீகத்தைப் பெற்று அலங்காரப் பொருட்களாக வீற்றிருக்கின்றன. பழமையான சின்னங்கள் அனைத்தும் புதுமையின் பொக்கிஷங்களாக உள்ளன. குமாரசாமி சோமசுந்தரம் "மனித விழுமியங்கள்" என்ற நூலில்,

"நாகரிகங்கள் அநாகரிகங்களாதலும், அநாகரிகங்கள் நாகரிகங்கள் ஆதலும் மனித மனங்களைப் பொறுத்த விடயங்கள். இவை நமக்கு உணர்த்துவது என்ன? மனித விழுமியங்களும், மனிதப் பண்புகளும் மிக விரைவில் மனித மனங்களின் நடுநாயகமாக வீற்றிருந்து செங்கோலொச்சும் என்ற நம்பிக்கையைத்தான் உணர்த்துகின்றன. இவற்றிலும் விஷயம் இருக்கிறது என்று உணரும் நாள் வெகு விரைவில் புலரும்"[2] (மனித விழுமியங்கள்.ப:69)
என்று கூறுகிறார்.

இதுவரை கூறிய கருத்துக்களை நாம் பார்க்கும்பொழுது நிரந்தரப் பெருமானம்

உள்ளவைகள், தற்காலிகப் பெருமானம் உள்ளவைகள் என்பதைப் பகுத்துப் பார்க்க முடிகிறது. இது ஆளுக்கு ஆள், சமூகத்திற்கு சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இதில் சில முரண்பட்ட கருத்துக்களும் உண்டு, சிலர் ஏற்பர், சிலர் ஏற்க மறுப்பர், இவற்றில் சில பொருட்களுக்கான மதிப்பீடென்பது எல்லோராலும் ஒருமிக்கதான கருத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் சிலவை அடங்கும் இது மனிதனின் மனநிலையினைப் பொறுத்தே அமையும். வள்ளுவப் பெருந்தகை "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார். இப்பாடல் ஒன்றே பூமியில் பிறந்த அனைத்து உயிர்களும் சமம் வேறுபாடு என்பதே இல்லை என்று எளிமையாக நமக்குக் கூறுகிறார்.

**விழுமியங்களின் முக்கியத்துவம்**

ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றது. பண்பாடுகளில் எண்ணற்ற கூறுகள் இருப்பினும் சில பண்பாடுகள் நேர்மை, அமைதி, சமத்துவம், தற்சார்புடைமை, கடவுள் வழிபாடு, போன்ற விழுமியங்களுள் ஏதேனும் ஒன்றிற்கு முக்கியத்துவம் தருகின்றது. இந்தியர்களுக்கு ஆன்மீக உணர்வும் இன்றியமையாத விழுமியங்களாக உள்ளது.

நெறிமுறைகள் சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகளாக வளம் வருகின்றன. தனிமனிதராக இருந்தாலும் சரி, குடும்பமாக அல்லது குழுவினராக இருந்தாலும் சரி அவர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதும் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்பதும் நெறிமுறைகளுக்கு உட்பட்ட ஒன்றாகும்.

வண்ணதாசன் "சமவெளி" சிறுகதைப் பகுதியில் மனிதர்களின் தேடல்களைப் பொறுத்தே மதிப்பீடுகள் அமைகின்றது. இயற்கையை அதன் போக்கில் செயல்படுவதை ரசிப்பதும், இயல்பாக வாழ்வதுமே உண்மையான மகிழ்ச்சி என்பதையும் குறிப்பிடுகிறார்.

"ஆக்கர் வாங்காத பம்பரம், மணி உதிராத வெள்ளிக் கொலுசு, நசுங்காத பித்தளைக் குடம், கருகிப்போகாத பலாக்கொட்டை, கொறுவாய் இல்லாத தங்கச்சி ஊற்றுகிற தோசை, காயம் படாத ஆண்பிள்ளை மனது. இவையெல்லாம் நன்றாகவா இருக்கும். எல்லாவற்றையும் நீருக்கும், நெருப்புக்கும், காற்றுக்கும், வெளிச்சத்திற்கும் உண்மையாக இருக்க அனுமதியுங்கள். இயல்பு நம்மை வழி நடத்தும். புல்லை யாரும் நடுவதில்லை. தானாக வளர்கிறது"[3] (சமவெளி .ப.1)

என்று கூறும்பொழுது மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது புரிகிறது. ஒரு பொருளுக்கு நாம் கொடுக்கும் மதிப்பீடானது மனிதனின் எண்ணம், செயல் இவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றது. இவ்வாறு எண்ணம் போன்ற பலவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதே பிற்சூழலில் மதிப்பாக மாறுகிறது. இம்மதிப்பு பலருக்கு நன்மை தரக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு தரப்படும் மதிப்பானது மனிதனை ஒரு நல்ல சமுதாயத்தை நோக்கி அழைத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

சிலர் பணத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர், சிலர் பலத்தில் உயர்ந்தவர்களாககக் கருதப்படுகின்றனர். சிலர் அதிகாரத்தில் இன்னும் சிலர் அரசியலில் உயர்ந்தவர்களாக உள்ளனர். மேலும் சிலர் ஒழுக்கத்திலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களாக உள்ளனர். சிலர் இல்லறத்திலும், சிலர் துறவத்திலும் உயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். நாம் எச்செயலில் இருந்தாலும் அல்லது பின்பற்றினாலும் அந்தந்த செயலுக்கு ஏற்ப நாம் மதிப்பினைப் பின்பற்ற வேண்டும். மதிப்போடு உண்மையாக, நேர்மையாக உயர்ந்த விழுமியத்தைப் பெற்றுத் திகழ வேண்டும் இவற்றில் சில உலகப்பண்பு சார்ந்தவையாகவும் உள்ளன. சில

மனிதப்பண்பு சார்ந்தவைகளாகவும் உள்ளன. பெயர், பதவி, அரசியல், அந்தஸ்து, புகழ், பணம், அதிகாரம், பொருள் இவையனைத்தும் உலகியல் சார்ந்த மதிப்பீட்டினைத் தருபவை. நற்பண்பு, நற்குணம், நற்செயல், நீதி, தூய்மை, உண்மை, நேர்மை, ஆகியவை மனிதப்பண்பு சார்ந்த மதிப்பீடாகும். மனிதன் சிறந்தவனாக இருக்க வேண்டும் எனில் அவனுடைய தேவைகள் முதலில் புர்த்தி செய்தல் வேண்டும்.

வண்ணதாசன் "பெயர் தெரியாமல் ஒரு பறவை" கதைப்பகுதியில் மனிதர்களின் பொருள் சார்ந்த நடைமுறையை நமக்குக் காண்பிக்கிறார்.

"இவ்வளவு அழகான பேனாவை, மூடியைப் பின்னால் செருகிக் கொள்ள முடியாதபடி ஏன் வடிவமைத்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு மூடியையும், பேனாவையும் பிரித்து வைத்து உபயோகிக்கவே முடியாது.நிறையப் பேர், ரொம்பப் படித்தவர்கள்கூடமிகநளினமாகஉயர்பதவி மேஜைகளின் பின்னிருப்பவர் உட்பட, மூடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டே தன்னுடைய பேனாவையோ, பால்பாயிண்ட் பேனாவையோ என்னிடம் தருகிறார்கள். நிச்சயம் இது நம்பிக்கைக் குறைவோ அல்லது மறதியாக மூடிப்பையில் செருகிக் கொண்டு போய்விடுவதைத் தடுக்கிற கெட்டிக்காரத்தனமோ மட்டும் அல்ல. அவர்கள் தனிமையின் தனியாக இருக்க விரும்புவதன் ஒரு உளவியல் வெளிப்பாடு என்றே எனக்குத் தோன்றுகிறது"[4] (பெயர் தெரியாமல் ஒரு பறவை.ப:164) என்பதில் இருந்து மனிதன் என்பவன் பொருள் சார்ந்த விஷயங்களில் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு தான் காணப்படுகிறான். தாம் பெற்ற பொருட்களைப் பிறருக்கு பகிர்ந்து கொடுப்பதில் கூட சில வரன்முறைகள் காணப்பட்டது. ஆனால் அக்காலத்தில் வாழ்ந்த முன்னோர்கள் தம் பொருட்களைத் தனக்காக மட்டுமே வைத்துக்கொள்ளும் எண்ணமோ, தேவைகளோ, இல்லாமல் அன்பையும் ஒழுக்கத்தையும் மட்டுமே இருப்பாக வைத்துக் கொண்டனர்.

வண்ணதாசன் "உருப்பளிங்கு" என்னும் கவிதைப் புத்தகத்தில் மனிதனின் சிந்தனைகளையும் பொருள் சார்ந்த நிலைகளையும் நேர்மறையான சிந்தனைகளைக் கொண்டு அழகாகக் காட்டுகிறார்.

**"உருண்டு விழுந்தோடும் பென்சிலை**
**குனிந்தெடுத்துத்தந்த சிறுமியிடம் கொடுக்கையில்**
**பென்சில் அழகாக இருந்தது**
**ஒரு உலகம் போல.**
**உலகம் அழகாக இருந்தது**
**ஒரு பென்சில் போல"[5]**

**(உருப்பளிங்கு.ப:82)**

என்று கூறுவதில் இருந்து இதில் நேர்மறையானவைகளையும் காண முடிகிறது. சிலர் தாராள மனத்துடன் பிறரிடம் பழகுவதையும் உதவி செய்வதையும் காணலாம். ஆனால் சில மனிதர்கள் தன் பொருள் சார்ந்த விஷயங்களில் சுய நலத்துடனும் எதையும் கண்டும் காணாததும் போல நடந்து கொள்வதையும் நாம் சில காணும்படியாகத்தான் ஆகிறது. உதவி செய்து தம்மைப் போல் பிறரைக்காண நேர்ந்தால் மனித குலம் மிக உயர்ந்ததாகவே மாற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

## அத்தியாவசியப் பொருட்களும் வணிகமும்

இன்று நாம் உயிர்வாழ வேண்டுமெனில் உணவு என்பது அடிப்படைப் பொருள்களில் ஒன்றாக உள்ளது. இத்தகைய உணவுப் பொருட்களை நாம் பெற வேண்டும் எனில் பணமே தேவை. பணத்தின் மூலமே நாம் அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறிகள் மற்ற வீட்டு உபயோகப் பொருட்களைப் பெறுகிறோம். ஆனால் அன்றைய காலநிலையில் இச்சூழல் இல்லை.

நம் நாட்டில் அதிகமாக விளையும் பொருட்களை தம் தேவைக்கு வைத்துக் கொண்டு அதிகமாக உள்ள பொருட்களை

பிற நாட்டு மக்களுக்குக் கொடுத்து நமக்குத் தேவையானதை அந்நாட்டில் விளையும் பொருட்களை நாம் பெற்றுக் கொள்ளும் முறையையே பின்பற்றினர். இது உணவுப் பொருட்களுக்கு மட்டும் இல்லாமல், வாசனைப் பொருட்கள், துணிமணிகள், ஆபரணங்கள், விலங்குகள், போன்றவற்றையும் நாம் பெற்றுக் கொண்டும் கொடுத்தும் வந்தோம். இவை அன்றைய காலநிலைக்குத் தகுந்தாற் போன்றே இருந்தன.

வண்ணதாசன் "சின்னு முதல் சின்னு வரை" என்னும் புத்தகத்தில் இயல்பான நடைமுறையை நமக்கு காட்டுகிறார்.

"உங்களுக்குச் சேரவேண்டியதை என்னிடமும், எனக்குச் சேர வேண்டியதை அவர்களிடமும், அவர்களுக்குரியதை இவளிடமுமாக மாற்றிக் மாற்றிக் கொடுத்துக் கொண்டே செல்கிற இந்த வாழ்க்கையில் அவர்களுக்குரியதை அவர்களிடம் சேர்த்துவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். முடிந்தால் நன்றாக இருக்கிறதா முடியாததால் நன்றாக இருக்கிறதா, முடிந்தால் சந்தோஷப்படுவதற்கும் முடியாவிட்டால் கோபப்படுவதற்கும் எல்லாம் இதில் எந்த முகாந்திரமாவது உண்டா?"[6]

*(சின்னு முதல் சின்னு வரை.ப:63)*

என்பதன் மூலம் மனிதர்களுக்கு பொருட்களின் தேவைகள் மிக முக்கியமான ஒன்றுதான். ஆனால், அவை தேவைக்கு அதிகமாக இருக்கும் பொழுது வீணாவதை யாராலும் தடுக்க முடியாத ஒன்றாகி விடுகிறது. அவ்வாறு வீணாகமல் இருப்பதற்கே வணிகம் செய்யும் முறைகளைப் பின்பற்றினர். இதனால் அளவுக்கு அதிகமான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு தனக்கு தேவையான பொருள்களை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

தேவைகளைப் பொறுத்தே அதன் மதிப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. பண்டைய கால மக்கள் பயன்படுத்திய கற்களால் ஆன பொருட்களான அம்மி, உரல், மாட்டு வண்டி, கலப்பை போன்ற பொருட்கள் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றாற்போல் பயன்பாடு குறைந்து வலுவிழந்து போய்விட்டன. எனவே ஒரு பொருளின் மதிப்பானது மனிதனின் தேவையைப் பொறுத்தே அமைகின்றது.

"நொடி நேர அரை வட்டம்" என்னும் கவிதைப்பகுதியில் மனிதனின் அறியாமையை சுட்டிக்காட்டுகின்றார்.

***"யாரின் நிர்ப்பந்தமும் இன்றி***
***மழையிடம் சொல்கிறேன்***
***எனக்குக் கத்திக் கப்பல்***
***செய்யத் தெரியாது.***
***ஏற்கனவே ஒரு கப்பல்***
***செக்கிழுத்துக்கொண்டிருக்கிறது***
***ஒரு கத்தி தொங்குகிறது***
***எப்போதும் தலைக்கு மேல்"[7]***

***(நொடி நேர அரை வட்டம் ப:39)***

காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப மனிதன் முன்னேற்றத்தைக் கண்டு கொண்டுதான் இருக்கிறான். கைபேசி, குளிரூட்டி, குளிர் சாதனப்பொருட்கள், மின்விசிறி.., இன்னும் பற்பல பொருள்கள் மனிதன் கண்டறிந்தவையே. இவை மதிப்பீட்டின் உயர்நிலையே ஆகும். இவை மனிதனுக்கும் சில சமயங்களில் சாதகமான சூழலையும், பல நேரங்களில் பாதகமான சூழலையும் ஏற்படுத்துகின்றது.

வெள்ளி, தங்கம், வைரம், பிளாட்டினம் போன்ற பொருட்கள் அனைத்தும் அதிக மதிப்புமிக்கவையாக உள்ளன. அதனால் அவை விளையுயர்ந்த பொருட்களாக உள்ளன. எவ்வளவு உயர்வான மதிப்புமிக்க பொருட்களாக இருந்தாலும் முற்றும் துறந்த முனிவர்களுக்கும், ஞானிகளுக்கும், ஆசையில்லாத மனிதர்களுக்கும் இவை வெறும் கற்களால் ஆன பொருட்களேயாகும். வைரக்கற்களுக்கும் சாதாரண கற்களுக்கும் வேறுபாடு காண்பதில்லை இரண்டும் இவர்களுக்கு ஒன்றே. எனவே ஒன்றன்

பொருளின் மதிப்பில் சிறுமையும், பெருமையும் அதைக் காணும் மனிதர்களின் வித்தியாசத்தைப் பொறுத்தே மாறுகின்றது. மனிதர்கள் பெறுமானம் மிக்கவர்கள் என்று கூறப்படுகின்றனர். இது ஏனைய பொருட்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இக்கூற்று சரியானதே என்பதை நாம் அறிய முடிகிறது.

ஒருவருக்குப் பொருளாதாரத் தேவைகள் நிறைவேறும் பொழுது மகிழ்ச்சியும் சமாதானமும் ஒற்றுமையும் ஏற்படுகின்றது. குடும்பத்தில் சமநிலைச் சூழல் நிழவுகிறது. குடும்பத்தின் தேவைகள் நிறைவேறும் பொழுது அனைத்து நிலைகளிலும் வெற்றிகரமான மனநிலை நிலவ ஆரம்பிக்கிறது. நாகரீக வளர்ச்சிக்கு ஏற்பவும் இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்பவும் மனிதனின் தேவைகளானது மாற்றமடைகின்றது. நிகழ்காலத்திற்குத் தேவையான அல்லது தேவைகளை நிறைவு செய்யக்கூடிய விழுமியங்கள் வளர்ச்சியடைந்து எதிர்காலத் தேவைகளையும் நிறைவு செய்யும் என்று யாராலும் கூறமுடியாது.

## பங்கீடும் பகிர்வும்

சங்க காலத்தில் வாழ்ந்த சமுதாய மக்கள் தனித்துண்ணும் பழக்கத்தையும் தனித்து வாழும் பழக்கத்தையும் தவிர்த்து வந்தனர். தன்னால் முடிந்தவரை தன்னிடம் உள்ள பொருட்களையும் உணவினையும் பகிர்ந்து வாழ்ந்தே பழகினர். இது தமிழர் பண்பாட்டை வெளிப்படையாக உலகிற்கு அறிவிக்கும் வண்ணம் அமைந்தது.

ஒருவனுடைய பொருளாதார நிலையானது அவனிடம் உள்ள செல்வ வளத்தை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படுகிறது. இன்று வரை சமூகமானது பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டே காணப்படுகிறது. உழைக்கும் வர்க்கத்தினர் தனது பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யும் போதுதான் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

வண்ணதாசன் "சில இறகுகள் சில பறவைகள்" பகுதியில் மனிதனின் பொருள் சார்ந்த விழுமியங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"எல்லா நல்லியல்புகளையும் மனத்தில் பொதிந்து வைத்துக் கொடுக்க வேண்டும் போல "பொருள் இல்லார்க்கு" என்பது மிகவும் பொருந்தும் படியாகவே இருக்கிறது. ஒவ்வொரு தினமும் சம்பளத்தைவிட ஒற்றை ரூபாய் சம்பாதிக்க முடியாத இந்த என் 52ஆம் வயதில் மிகவும் நெருங்கிய உறவினர்களின் தராசுகளில் கூட பொருள் முதலான எடைக்கற்களையே உபயோகிக்கத் துவங்கிவிட்ட பிறகு, எந்த திசையில் செல்வது என்று தெரியவில்லை. இதுவரை சென்று கொண்டிருக்கிற திசை தவிரவேறு எந்தத் திசையும் எனக்குத் தெரியவும் தெரியாது"[8]

(சில இறகுகள் சில பறவைகள்.ப:47)

என்பதன் மூலம் பொருள் உள்ளவர்களே அதிக பலம் படைத்தவர்கள் என்ற எண்ணம் மக்கள் மனதில் நிலையாக ஆரம்பித்துவிட்டது. மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடங்கி ஆடம்பரத் தேவைகள் வரைக்கும் பொருள் சார்ந்து அமைகிறது. எனவே, பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களே அரசியலிலும், அதிகாரத்திலும் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். பொருளாதாரத்தில் கீழ் நிலையில் உள்ளவர்கள் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் கருத்துக்கள் நியாயமாக, நேர்மையானதாக இருந்தாலும் அதை ஏற்க மறுக்கின்றனர்.

இதையே திருவள்ளுவர்.

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லது இல்லை பொருள்"[9]**

**(கு.எண்:751)**

என்று கூறுகிறார்.

சில நேரங்களில் வசதி வாய்ப்புகளைப் பார்த்துக் கொண்டு தன் பிள்ளைக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு இன்றளவும்

பொருள் சார்ந்த காரணங்களால் சிக்கல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் ஆழாகிக் கொண்டிருகின்ற பெண்கள் ஏராளமாகத் தான் இருக்கின்றனர். வெளியிலும் சொல்ல முடியாமல் பெற்றோர்களிடத்திலும் தான் படும் கஷ்டங்களை கூற முடியாமலும் மனதுக்குள் அனைத்தையும் வைத்துக்கொண்டு துன்பம் அனுபவிக்கும் பெண்கள் இன்னும் உண்டு.

வண்ணதாசன் "மீனைப்போல் இருக்கிற மீன்" என்னும் கவிதைப் புத்தகத்தில் பெண்களைப் பற்றி வர்ணிக்கிறார். பெண்கள் எவ்வளவு தான் துன்பங்கள் அனுபவித்தாலும் அதை எப்பொழுதும் வெளிக்காட்டுவதில்லை. சிறு சிறு விஷயங்களில் கூட அதிகமான மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதை குறிப்பிடுகிறார்.

***"நான் கற்றுக் கொள்கிறவன் தானே***
***எட்டு, ஒன்பது வயது இலக்கியாவிடம்***
***கற்றுக்கொள்ளும்படி ஒரு சிரிப்பு இருந்தது***
***அவளை வரைவது எனில்***
***அந்த "எப்போதும் சிரிப்பை" வரைவதுதான்***
***இந்த வாழ்வின் கிளையொன்று குனிந்து***
***பறித்துக் கொள் என அந்தக் கனியை***
***அவளுக்கு அளித்திருக்கிறது***
***திக்குத் தெரியாத வனத்திலிருந்து***
***இந்த ஒரே ஒரு புவை மட்டும்***
***அவள் பறித்து வந்திருக்கிறாள்"[10]***

***(மீனைப்போல் இருக்கிற மீன்.ப:26)***

என்கிறார். குடும்பம், சமுதாயம் இரண்டிலும் ஆண், பெண் இருவருக்கும் உரிமைகளில் சமத்துவம் உண்டு, இதில் நாம் எதிர்ப்பினைக் கூறமுடியாது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் கடமைகளைப் பொறுத்தளவில் ஆண், பெண் இருவருக்கும் தனித்தனி கடமைகளும் உண்டு. பொது வாழ்க்கையிலும் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் பெரும்பாலும் ஒழுக்கப்பண்புகள் பெற்று வாழ்தல் வேண்டும். ஏனெனில் மனித விழுமியங்களானது இன்றைய காலக்கட்டத்தில் குறைந்து கொண்டே செல்கின்றன.

சங்ககால இலக்கியங்களில் புறநானூறு மனிதனின் விழுமியங்களை எடுத்துக் கூறுகின்றது. அகப் - புற வாழ்க்கையில் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி நடந்தவைகளையும் அரசுசார்ந்த ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி நடந்தவைகளையும் நாம் அறியலாம். தனிமனித உயர்பண்பின் முழுமையே குடும்ப வாழ்வில் நிறைவடைகின்றது. உணவில்லாமல் இறந்து போகும் வறுமையில்கூட வாய்மையுடனும் உண்மையுடனும் வாழ்ந்த தமிழர் வாழ்வுதான் சிறந்த செம்மையான வாழ்வாகும். இச்செயல்பாடு விழுமியத்தை பறை சாற்றுவதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

## முடிவுரை

சில நேரங்களில் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக தற்காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் பெருகி மனிதப் பண்பை சிதைத்து வருகிறது. இதனால் மனிதத்தேவையும் பரவலாக உள்ளது. மனிதன் மற்ற உயிர்களை மதித்துப் பேணுவதைக் காட்டிலும் தன் இனமான மற்றொரு மனிதனையே மதித்துப் போற்றுகின்றான். பெரும் பொருள் கொண்டு வாழ்ந்தவர்கள் அல்லாமல் பொருளே இல்லாதவர்களும் கூட மற்றவர்களின் குறிப்பறிந்து பகிர்ந்து கொடுத்து உண்டனர். உயர்ந்த ஒழுக்கங்களையும் கடைபிடித்தனர். தன்னிடம் ஒன்றுமே இல்லாத நிலையிலும் கூட பிறருக்கு பொருட்களைப் பகிர்ந்து கொடுக்கும் உயர்வான பண்பும் காணப்பட்டது. எனவே மனித வாழ்க்கை செழுமையானதாக இருக்க வேண்டுமாயின் அவன் மதிப்பீடுகளைப் பின்பற்றி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

## சான்றெண் விளக்கம்

1. பக்தவத்சல பாரதி, "பண்பாட்டு மானுடவியல்", ***1990,*** ப:***164*** மணிவாசகர் பதிப்பகம், புதுச்சேரி.

2. குமாரசாமி சோமசுந்தரம், “மனித விழுமியங்கள்”, 1995, ப:69 ராஜீ வெளி யீடு, கொழும்பு.

## பார்வை நூல்கள்

1. வண்ணதாசன், “சமவெளி”, 1983, ப:1, சந்தியாபதிப்பகம், சென்னை.
2. வண்ணதாசன், “பெயர் தெரியாமல் ஒரு பறவை”, 2011, ப:164, சந்தியா பதிப்பகம், சென்னை.
3. வண்ணதாசன், “உருப்பளிங்கு”, 2019, ப:82, சந்தியா பதிப்பகம், சென்னை.
4. வண்ணதாசன், “சின்னு முதல் சின்னு வரை”, 2014, ப:63, சந்தியா பதிப்பகம், சென்னை.
5. வண்ணதாசன், “நொடி நேர அரை வட்டம்” 2014, ப:39, சந்தியா பதிப்பகம், சென்னை.
6. வண்ணதாசன், “சில இறகுகள் சில பறவைகள்”, 2011, ப:27 சந்தியா பதிப்பகம், சென்னை.
7. “திருக்குறள்” கு.எண்.751
8. வண்ணதாசன், “மீனைப் போல் இருக்கிற மீன்”, 2012, ப:26, சந்தியா பதிப்பகம், சென்னை.